# அசல் வழக்கு எண் 17/2017

## PW1

## சாமிநாதன்,த/பெ.சின்னகண்ணு

## நாள் 15.07.2019

**வா.சா.1 - முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதியாவேன். வழக்கு விபரங்கள் எனக்குத் தெரியும். எனது சாட்சியத்தை ஏற்கனவே எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

14.04.2004 தேதியிட்ட என் பெயரிலுள்ள கிரயப்பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.1. ஆர்.எஸ்.ஆர் ரெக்கார்டு நகல் வா.சா.ஆ.2. ஆர்.ஓ.ஆர். ரெக்கார்டு நகல் வா.சா.ஆ.3. சர்வே எண் 210/1பி-க்கான கணிணி சிட்டா வா.சா.ஆ.4. புல வரைப்பட நகல் வா.சா.ஆ.5. 29.12.2014 தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு (எண்ணிக்கை 10) வா.சா.ஆ.6. மேற்படி அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை (எண்ணிக்கை 10) வா.சா.ஆ.7. 18.01.2017 அன்று 12ஆம் பிரதிவாதியிடம் கொடுத்த மனுவின் நகல் வா.சா.ஆ.8. 12ஆம் பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியர் மனுவை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9. 18.01.2017 அன்று 11ஆம் பிரதிவாதியிடம் கொடுத்த மனுவின் நகல் வா.சா.ஆ.10. 11ஆம் பிரதிவாதி வருவாய் வட்டாட்சியர் மனுவை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.11. 1 முதல் 10 பிரதிவாதிகள் தாக்கல்செய்த கேவியட் மனு வா.சா.ஆ.12. வில்லங்க சான்று வா.சா.ஆ.13. வழக்கு சொத்தின் வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ.14.

மேற்குறிப்பிட்ட சான்றாவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்துகொண்டு பிராதுபடி தீர்ப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

Sd/- சாமிநாதன்,

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/- G. Sathiakumar,
District Munsif, Pattukkottai,(FAC)